# ZETA
## INSTITUTE OF PROFESSIONAL STUDIES

100% SUCCESS

(304) நிறுவனம் மற்றும் தனியார் வரியியல்
(Coporate and Personal Taxation)

A.R.M. FAHIM
BBA(HONS) SEUSL(R), AAT(PF), CA
Corporate Level (R), AAT, A/L (Lecturer)

## பாட உள்ளடக்கம்

1. இலங்கையின் வரியியலுக்கான அறிமுகம் - 5%
2. வருமான மூலங்கள் (மொத்த நியதி சட்ட வருமானம் ) - 30%
3. தனியுடமை, கம்பனிக்கான வரியியல் - 20%
4. பங்குடமைக்கான வரியியல் - 10%
5. கடப்பாடுகளும் நடவடிக்கைகளும் - 10%
6. மூலதன ஆதாய வரியியல் - 10%
7. ஏனைய வணிகவரிகள் - 15%
    - VAT
    - முத்தரைவரி
    - சமூகப் பாதுகாப்பு வரி - SSCL
    - சுற்றுலா அபிவிருத்தி வரி - TDL

அலகு – 01

# இலங்கை வரியியலுக்கான அறிமுகம்

வரி இரண்டு வகைப்படும்

1. நேர் வரி
2. நேரில் வரி

**நேர் வரி**

இவ் வரியினை செலுத்துபவரும் இவ் வரியின் இறுதிச் சுமையை தாங்குபவரும் ஒரே நபராக காணப்படுபவராயின் அது நேர் வரி ஆகும்.

Ex : வருமான வரி
முத்திரை வரி
தேரகட்டுமான வரி
பந்தாய வரி

**நேரில் வரி**

வரியினை செலுத்துபவர் ஒருபவராகவும் அதன் இறுதிச் சுமையை தாங்குபவர் பிறிதொரு நபராகவும் காணப்படுபவராயின் அது நேரில் வரியாகும்.

Ex : VAT வரி
சுங்க வரி
கலால் வரி

**இலங்கையில் வரியினை அறவிடும் அதிகார சபை நிறுவனங்கள்**

1. இறைவரி திணைக்களம்
2. மாகாணசபை வருமான வரி திணைக்களம்
3. சுங்க திணைக்களம்
4. கலால் வரி திணைக்களம்

**ஆள் / பேர்**

வரி சட்டத்தின் கீழ் வருமானம் உழைக்கின்ற மற்றும் வரி செலுத்த தகுதியுடைவர்கள்

Ex : தனிநபர்
கம்பனி
அரச கூட்டுத்தாபனம்
அரச திணைக்களம்

**வதிவிட தகைமை**

1. தனிரயர் வதிவிட தகைமை

- 2017ம் ஆண்டின் 24ம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்திற்கமைய குறித்த ஒரு நபர் 183 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் இலங்கையில் வசித்திருப்பாராயின் அவர் ஒரு வதிவுள்ள நபராக கருதப்பட்டு அவரிடமிருந்து வரி அறவிடப்படும்.

**வரிமதிப்பாண்டு**

- ஒரு ஆண்டில் (1/4) ஆரம்பித்து அடுத்து வரும் ஆண்டின் (31/3)ல் முடிவடையக் கூடிய 12 மாதங்களை கொண்ட காலப்பகுதிக்குள் இவ் தனிநபர் வதிவிட தகைபை கணிப்படப்படும்.

  Ex : (1 / 4 / 2023 - 31 / 3 / 2024)

**2. கம்பனியின் வதிவிடதகைமை**

- ஒரு கம்பனியானது வதிவிட அந்தஸ்தை அடைய வேண்டுமாயின் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

1. இலங்கை சட்டத்தின் கீழ் கூட்டிணைக்க பட்டிருத்தல்.
2. கம்பனியின் தலைமை அலுவலகம் அல்லது உப அலுவலகம் இலங்கையில் காணப்படல்.
3. கம்பனியின் முகாமையும் கட்டுப்பாடும் இலங்கையில் காணப்படல்.